மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை மாணவர் விடுதிக்கும் மற்றும் பழையனூர் மாணவர் விடுதிக்கும் அரசு கட்டடம் கட்ட முறையே 27–6–2003–லும் மற்றும் 5–9–2003–லும் அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுக் கட்டடம் கட்டும் பணி நடவடிக்கையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 50, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

50—

பேருந்து இயக்குதல்

***43588—திருமதி சி.எம். சூரியகலா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு–சென்னை அரசுப் பேருந்து வழித்தடம் எண் 84, 89 ஆகியவை பள்ளிகொண்டா வழித்தடத்திற்குப் பதிலாக வேலூர்–விரிஞ்சிபுரம்–கே.வி.குப்பம் வழியாக பேரணாம்பட்டுக்கு இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு–சென்னை அரசுப் பேருந்து வழித்தட எண்கள் 84, 89 ஆகியவற்றை பள்ளிகொண்டா வழித்தடத்திற்குப் பதிலாக வேலூர்–விரிஞ்சிபுரம்–கே.வி.குப்பம் வழியாக பேரணாம்பட்டுக்கு இயக்குவதற்கு சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி சி.எம். சூரியகலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாத கமலங்களுக்கு என் பணிவான வணக்கம்.

பேரணாம்பட்டு–சென்னை–பள்ளிகொண்டா வழியாக நிறையப் பேருந்துகள் உள்ளன. அதுமட்டுமல்லாமல் திருப்பத்தூரிலிருந்து புறப்படும் பேருந்துகளும் பள்ளிகொண்டா வழியாகத்தான் சென்னைக்குச் செல்கின்றன. ஆனால், பேரணாம்பட்டு, குடியாத்தம், கே.வி. குப்பம், வடுகந்தாங்கல், விருஞ்சிபுரம் வழியாகச் செல்ல பேருந்துகள் கிடையாது. 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த மார்கபந்து ஈசுவரர் ஆலயம் விரிஞ்சிபுரத்தில் உள்ளது. இங்கு முஸ்லீம் பெருமக்கள் அதிகமாக உள்ளனர். இந்த வழித்தடத்தில் பேருந்துகள் இயக்கினால் பக்தர்களுக்கும், வணிகர்களுக்கும், வேலைக்குச் செல்லும் பணியாளர்களுக்கும் உதவியாக இருக்கும். பேருந்துகள் இல்லாத காரணத்தினால் இவர்கள் வேலூர் போய், சென்னைக்குச் செல்ல முன் பதிவு செய்து காத்திருக்க வேண்டும். எல்லோருடைய வசதிக்காகவும் வேண்டி 84, 89 வழித் தடப் பேருந்துகளை பொதுமக்களின் நலன் கருதி இயக்கினால் உதவியாக இருக்கும். இலாபத்தில் இயங்கும் ஏதாவது ஒரு பேருந்தை இந்த வழித்தடத்தில் இயக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய வழித்தடத்தில் வேலூரிலிருந்து விருஞ்சிபுரம், கே.வி.குப்பம் வழியாக அரசு நகர வழித்தட எண் 17 மூலம் வேலூர்—வி.கே. புரம் 4 நடைகளும், வேலூர்—தேவரிஷிகுப்பம் 8 நடைகளும் என 12 நடைகள் அந்த வழியிலே, அரசுப் பேருந்துகள், இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதுபோக 2 தனியார் பேருந்துகள் மூலம் தினசரி 10 நடைகளும் அந்த வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, அந்த வழித்தடத்தில் ஏற்கெனவே போதிய பேருந்து வசதிகள் இருப்பதால் இதுகுறித்து மேல் நடவடிக்கை—புதிய பேருந்துகள் அதிலே கூடுதலாக விடுவதற்கு—தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், பேரணாம்பட்டு—சென்னை (வழி) பள்ளிகொண்டா என இயக்கப்படும் 84, 89 வழித்தடப் பேருந்துகள் அரசின் தக்க உரிமம் பெற்று இயக்கப்படுகின்றன. அந்த ஒரு வழித்தடத்தில் உரிமம் பெற்று இயக்கப்படுகின்ற பேருந்துகளை மற்றொரு வழித்தடத்திற்கு மாற்ற வேண்டுமென்று சொன்னால் அது உரிமத்தை மீறிய குற்றமாகும். எனவே, விதிமுறைப்படியும் அதற்கு சாத்தியமில்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 51, திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.